

தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் வைஷ்ணவி பால் வழங்கினார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் உள்பட பலர் உள்ளனர்.




2026 சட்டமன்ற தேர்தலில், நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்டு 8099 வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற்ற நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜு, குன்னூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்றுக்கொண்டார்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திருமங்கலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றார். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் என்.அசோக்குமார் வெற்றி பெற்றதற்கான சான்றிதழைப் பெற்றார்.




கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற மாநில இளைஞரணி துணை செயலாளர் பி.எஸ் சீனிவாசனுக்கு வெற்றிச் சான்றிதழை தேர்தல் அதிகாரி வழங்கினார். அப்போது உடன் மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ், தேர்தல் பொறுப்பாளர் பார். இளங்கோவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ஒன்றிய செயலாளர் ரகுநாத் ஆகியோர் உடன் இருந்தனர்.



கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், நகர கழக செயலாளர் குட்டி (எ) சுதாகர், வால்பாறை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் பெற்றார். உடன் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ் உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி ம.தி.மு.க.வேட்பாளர் தி.மு. ராஜேந்திரன் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் ராஜேந்திரன் வழங்கினார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் செல்லத்துரை, நகர செயலாளர் வெங்கடேசன் உள்பட பலர் உள்ளனர்.




தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கழக வேட்பாளர் ஆ.மகாராசன் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்று கொண்டார்.




நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான மு.அப்துல்வஹாப் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் நெல்லை மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர்.மோனிகா ராணா வழங்கினார்.உடன் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமார்,நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ்,துணை மேயர் ராஜு உள்பட பலர் உள்ளனர்.



ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க வேட்பாளர் பால் மனோஜ் பாண்டியன் வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் ராமச்சந்திரன் வழங்கினார்.அருகில் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர். உள்பட பலர் உள்ளனர்.